//பதிவஞ்சல் ஒப்புதலுடன்/
1 எண் இணை சார்பதிவகம்
பழனி

ந.க.எண்.4803/அபபி/2025 நாள்.29.12.2025

பொருள் : மனு – தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005– பழனி பதிவு மாவட்டம் – 1 எண் இணை சார்பதிவகம் – சார்பதிவாளர் அலுவலகங்களில் குறுந்தகடு வழங்கப்பட்டது தொடர்பாக சில தகவல்கள் கோரியது – தகவல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : மாவட்டப்பதிவாளர் (நிரு) அவர்களின் கடித எண்.4729/ ஆ1/2025 நாள்.18.12.2025( உடன் இணைத்து பெறப்பட்ட திரு.B.சவடமுத்து என்பவரது மனு நாள்.04.11.2025.) இவ்வலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற நாள்.18.12.2025

************

பார்வையில் காணும் தங்களின் மனு பரிசீலிக்கப்பட்டது. பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு தங்கள் மனுவில் கோரிய இனம் 2, 3, 4, 5 & 7 விவரங்களுக்கு கீழ்கண்டவாறு தகவல் வழங்கப்படுகிறது.

| வ.எண். | கோரிய தகவல்கள் | வழங்கப்படும் தகவல்கள் |
|---|---|---|
| 1 | கடந்த 4 ஆண்டுகளில் (ஜனவரி 1 2022 முதல் இன்று வரை) பழனி பதிவுமாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் இந்தக் குறுந்தகடு (CD) கட்டணம் மூலம் வசூலிக்கப்பட்ட மொத்த தொகை எவ்வளவு? (ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகம் வாரியாகவும், | ஆவணம் மற்றும் திருமணபதிவுகள் உட்பட<br>01.01.2022 முதல் 31.12.2022 வரை ரூ.384600/–<br>01.01.2023 முதல் 31.12.2023 வரை ரூ.322600/–<br>01.01.2024 முதல் 31.12.2024 வரை ரூ.311600/–<br>01.01.2025 முதல் 22.12.2025 வரை ரூ.320600/–<br>ஆக மொத்தம் ரூ.1339400/– தொகை |

| | | |
|---|---|---|
| | ஆண்டு வாரியாகவும் தனித்தனி பட்டியலை வழங்கவும்) | ஆவணப்பதிவு மேற்கொள்ளப்பட்ட ஆவணதாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் மனுதாரருக்கு தகவலாக வழங்கப்படுகிறது |
| 2 | மேற்கண்ட காலகட்டத்தில் (கேள்வி 2-ல் உள்ள படி) ரூ.100/- கட்டணம்செலுத்திய பொதுமக்களில் எத்தனை பேருக்கு குறுந்தகடு முறையாக வழங்கப்பட்டுள்ளது? எத்தனை பேருக்கு வழங்கப்படவில்லை? | 01.01.2022 முதல் 31.12.2022 வரை 3846<br>01.01.2023 முதல் 31.12.2023 வரை 3226<br>01.01.2024 முதல் 31.12.2024 வரை 3116<br>01.01.2025 முதல் 29.05.2025 வரை 1310<br>ஆக மொத்தம் 11498 குறுந்தகடுகள் வழங்கப்பட்டுள்ளது. 30.05.2025 முதல் 22.12.2025 வரை ஆவணப்பதிவு மேற்கொள்ளப்பட்ட ஆவணதாரருக்கு குறுந்தகடுகள் இருப்பு இல்லாததால் வழங்கப்படவில்லை. திருவாளர் TCS நிறுவனத்தாரிடம் இருந்து குறுந்தகடுகள் பெறப்பட்டவுடன் 30.05.2025 முதல் 22.12.2025 வரை ஆவணப்பதிவு மேற்கொள்ளப்பட்ட ஆவணதாரர்களுக்கு குறுந்தகடுகள் வழங்கப்படும் என்ற விபரம் மனுதாரருக்கு தகவலாக வழங்கப்படுகிறது. |
| 3 | குறுந்தகடு வழங்கப்படவில்லை எனில் அதற்கான அதிகாரபூர்வ காரணம் என்ன? குறுந்தகடு வழங்கப்படாத பட்சத்தில் அதற்காக வசூலிக்கப்பட்ட கட்டணம் ரூ.100/- பொது மக்களுக்கு திரும்ப வழங்கப்பட்டதா? | திருவாளர் TCS நிறுவனத்தாரிடம் இருந்து இறுதியாக 12.05.2025 வரை குறுந்தகடுகள் வரப்பெற்றுள்ளது அதன் பின்னர் திருவாளர் TCS நிறுவனத்தாரிடம் இருந்து குறுந்தகடுகள் பெறப்படவில்லை. மேலும் இணையதள வழி வசூலிக்கப்பட்ட குறுத்தகடு கட்டணம் |

Scanned with OKEN Scanner

| | | |
|---|---|---|
| | இல்லையெனில் அவ்வாறு வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகை தற்போது எந்த அரசாங்க கணக்குத் தலைப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளது? | எவருக்கும் திரும்ப வழங்கப்படவில்லை. மேலும் குறுத்தகடுகட்டணம் 0030 03800 AH 21641 தலைப்பின் கீழ் வசூலிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் மனுதாரருக்கு தகவலாக வழங்கப்படுகிறது. |
| 4 | குறுந்தகடு பயன்பாடு குறைந்துவிட்டதால் அதற்கு பதிலாக ஆவண நகலை பென்டிரைவ்(Pen drive) அல்லது இ-மெயில் (E-Mail) மூலமாக ஏதேனும் வழங்ககப்பட்டுள்ளதா என்பதையும் எத்தனை நபர்களுக்கு அப்படி வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தகவலாக வழங்கவும் | பென்டிரைவ்(Pen drive) மற்றும் இ-மெயில் (E-Mail) மூலமாக எவருக்கும் ஆவண நகல் வழங்கப்படவில்லை என்ற தகவல் மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது. |
| 5 | கடந்த மூன்று ஆண்டுகளில் ஆவணத்தை பதிவு செய்தவர்களுக்கு குறுந்தகடுகளை வழங்கும் பொருட்டு தங்கள் பதிவு மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட குறுந்தகடுகளின் எண்ணிக்கை மற்றும் தொகையை வருட வாரியாக தகவலாக வழங்கவும் | திருவாளர் TCS நிறுவனத்தாரிடம் இருந்து கடந்த மூன்றாண்டுகளில் (2022, 2023, 2024) பெறப்பட்ட குறுந்தகடுகளின் எண்ணிக்கை 12300 என்ற விபரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது. |

தங்களுக்கு வழங்கப்பட்ட தகவல் குறித்து ஆட்சேபனை இருப்பின் கடிதம் பெற்ற 30 தினங்களுக்குள் கீழ்கண்ட மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

Scanned with OKEN Scanner

மேல்முறையீட்டு அலுவலர்
மேல்முறையீட்டு அலுவலர் மற்றும்
மாவட்டப்பதிவாளர் (நிருவாகம்),
மாவட்டப்பதிவாளர் அலுவலகம்,
ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகம்,
வட்டாட்சியர் அலுவலக வளாகம்,
பழனி.

(மு.பழனிச்சாமி)
பொது தகவல் அலுவலர்
1 எண் இணை சார்பதிவாளர்
பழனி

பெறுநர்:
திரு.B.சவடமுத்து,
42, ருத்ரப்பாநகர்,
கணபதி,
கோவை- 641 006

நகல்:
மாவட்டப்பதிவாளர்(நிரு) அவர்கள்,
பழனி (தகலுக்காகபணிந்துசமர்ப்பிக்கப்படுகிறது)